Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2038 வைகாசி 14 திங்கட்கிழமை (28.05.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 182

28 MAY 2007

## அரசும் புலிகளும் இராணுவ வெற்றியிலேயே அதிக நம்பிக்கை அதனால் போர் புரிவதில் வெகு தீவிரம்!

### விரைவில் யுத்தம் வெடிக்கும் அபாயம்

கொழும்பு,மே28

அரசாங்கப் படைகளும் விடுதலைப் புலிகளும் தமக்கே வெற்றி கிட்டும் என்று அதீத நம்பிக்கை கொண்டிருக்கின்றன. அதனால், அவை போரை நடத்துவதிலேயே வெகு தீவிரமாகக் காணப்படுகின்றன -

இத்தகைய பின்னணியில், எதிர்வரும் வாரங்களில் போர்வெடித்து, வன்முறைகள் அதிகரித்து இரத்த ஆறு ஓடும் சாத்தியம் நிறையவே உண்டு.

இவ்வாறு இலங்கை நிலைமை குறித்து இராஜதந்திரிகள் கணிப்பீடு செய்திருக்கிறார்கள்.

சர்வதேச செய்தி நிறுவனம் ஒன்று, இலங்கையின் நிலைமை குறித்த தனது ஆய்வில் இவ்வாறு இராஜதந்திர வட்டாரங்களை மேற்கோள் காட்டித் தகவல் வெளியிட்டிருக்கின்றது.

அமைதி முயற்சிகள் முறிந்துள்ள நிலையில் வான் வழி மற்றும் கடல் சமர்கள் பெரும் எடுப்பில் வெடிப்பதற்கான ஏது நிலைகள் அதிகரித்துள்ளன. அத்தகைய சமருக்கு அரசு, புலிகள் ஆகிய இருதரப்பினருமே மும்முரத்துடனும் தீவிரத்துடனும் தயாராகி வருகின்றனர் என ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

''வானிலும் கடலிலும் புலிகளால் எழுந்துள்ள சவாலைச் சமாளிப்பதற்காக அரசுப் படைகள் 'மிக் 29' ரக சுப்பசொனிக் ஜெற் விமானங்கள், 'எம். ஐ.-24' ரக தாக்குதல் ஹெலிகள், கடற்படையின் அதிவேகத் தாக்குதல் படகுகளுக்கு அதிக வீச்சும் செயற்றிறனும் கொண்ட சுடுகலன்கள் போன்றவற்றைச் சுவீகரிப்பதில் முனைப்புக் காட்டுகின்றன எனப் பாதுகாப்பு அதிகாரிகள் கூறுகின்றனர்.

''சமாதான முயற்சிகள் மீள ஆரம்பிக்கப்படுவதற்கான சாத்தியங்கள் பெரும்பாலும் அருகி அடியோடு இல்லாமல் போய்விட்டன. செத்துவிட்ட யுத்தநிறுத்தத்தை இனிமேலும் காப்பாற்றலாம் என்று நான் நம்பவில்லை. வருங்காலத்தில் இன்னும்

(05ஆம் பக்கம் பார்க்க)

## திருமலையில் கடற்படையினர் தாக்குதல்!

கொழும்பு, மே 28

திருமலை இலுப்பைக்குளம் காட்டுப் பகுதியில் புலிகள் மீது கடற்படையினர் மேற்கொண்ட தாக்குதலில் மூன்று புலிகள் கொல்லப்பட்டனர் என்று தேசிய பாதுகாப்பு ஊடகத் தகவல் நிலையம் தெரிவிக்கின்றது.

நேற்றுக் காலை 8. 45 மணிக்கு இச் சம்பவம் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

இலுப்பைக்குளம் காட்டுப்பகுதியிலிருந்து புலிகள் திருகோணமலை நகரப் பகுதிக்கு செல்ல முயற்சித்தபோது கடற்படையினர் மறைந்திருந்து இத்தாக்குதலை மேற்கொண்டுள்ளனர். தாக்குதலின் பின்னர் அப்பகுதியில் தேடுதலை மேற்கொண்ட படையினர் ஒரு மைக்ரோ பிஸ்டல் மற்றும் அதற்கான தோட்டாக்கள், தொலைகாட்டிகள், மூன்று செல்லிடத் தொலைபேசிகள் ஆகியவற்றைக் கண்டெடுத்தனர் எனவும் தேசிய பாதுகாப்புத் தகவல் நிலையம் தெரிவித்தது.(சி)

## முகமாலையில் நிலக்கண்ணிகள் மீட்பு

கொழும்பு, மே 28

முகமாலைப் பகுதியில் நேற்றுமுன் தினம் மாலை படையினர் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையில் 11 நிலக்கண்ணி வெடிகள் மீட்கப்பட்டுள்ளன என்று படைத்தரப்பினர் தெரிவித்திருக்கின்றனர்.

கடந்த வெள்ளிக்கிழமை முதல் விடுதலைப் புலிகளுக்கும் படையினருக்குமிடையில் குறித்த பகுதியில் மோதல் இடம்பெற்றிருக்கிறது. இதனையடுத்து படையினர் நடத்திய சோதனையின் போதே இவை கண்டுபிடிக்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்தப் பகுதியில் விடுதலைப்புலி உறுப்பினர் இருவரின் சடலங்களையும் படையினர் கண்டெடுத்தனர் என்றும் படைத்தரப்பு வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (சி)

## கொழும்பில் வெடித்த குண்டின் உண்மையான இலக்கு என்ன?

### ஆங்கில இதழின் ஆய்வில் வெவ்வேறு தகவல்கள்

''கொழும்பு துறைமுகத்துக்கு அருகில் கடந்த வியாழக்கிழமை நடத்தப்பட்ட குண்டுதாக்குதல், கொழும்பு துறைமுகத்தில் தரித்து நிற்கும் ஆயுதக்கப்பலில் இறக்கப்படும் ஆயுதங்களுக்கு வைக்கப்பட்ட குறியா என படைத்தரப்பில் இருந்து பலத்த சந்தேகம் எழும்பியுள்ளது.''

- இவ்வாறு 'த சண்டே ரைம்ஸ்' வார வெளியிட்டில் வெளிவந்த பாதுகாப்பு ஆய்வுக் கட்டுரையை ஆதாரம் காட்டி இணையத்தளங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அதில் மேலும் தெரிவிக்கப்படுவதாவது:-

நெடுந்தீவு கடற்படைத் தளத்தின் மீதான தாக்குதல் நடந்த சில மணிநேரங்களுக்குள் கொழும்புதுறைமுகத்திற்கு அண்டிய பகுதியில் குண்டு வெடித்துள்ளது. இது தூர இயக்கி மூலம் வெடிக்க வைக்கப்படும் குண்டு. படையினரின் பஸ்ஸை குறிவைத்து நடத்தப்பட்ட இந்தத் தாக்குதலில் படைத்தரப்பைச் சேர்ந்த ஒருவர் கொல்லப்பட்டார். 3 படையினர் காயமடைந்தனர்.

எனினும், மோட்டார் சைக்கிளில் பொருத்தப்பட்ட இந்த குண்டின் இலக்கு பஸ்தானா என்ற சந்தேகம் படையினர் மட்டத்தில் எழுந்துள்ளது. துறைமுகத்தில் இருந்து படையினருக்கான ஆயுதங்களை ஏற்றிச் செல்லும் பார ஊர்திகள் இந்த குண்டின் இலக்காக இருந்திருக்கலாம் என்ற சந்தேகம் படையினர் மத்தியில் வலுத்துள்ளது.

ஏனெனில், தாக்குதல் நடைபெற்ற சமயம் துறைமுகத்தில் தரித்து நின்ற ஆயுதக் கப்பலில் இருந்து ஆயுதத் தளபாடங்கள் இறக்கப்பட்டுக் கொண்டிருந்தன.

மேலும் அந்தக் குண்டு சில முக்கிய பிரமுகர்களை குறிவைத்தும் காத்திருந்திருக்கலாம் எனவும், வேறு ஒரு தரப்பு சந்தேகம் வெளியிட்டுள்ளது. இருந்த போதிலும் இந்த இரு தாக்குதல்களும் விடுதலைப்புலிகள் புதிய தாக்குதலுக்கு தம்மை தயார்ப்படுத்தி வருகின்றனர் என்பதனை எடுத்துக்காட்டுகின்றது என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)

## வவுனியாவில் இரு சடலங்கள் மீட்பு

கொழும்பு, மே 28

வவுனியா - தவசிக்குளம் பகுதியில் நேற்றுக்காலை இரண்டு சடலங்கள் பொலிஸாரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

கண்கள்கட்டப்பட்ட நிலையிலும், கைகள் பின்னால் இழுத்துக் கட்டப்பட்ட நிலையிலும் இந்தச் சடலங்கள் காணப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. எனினும் குறிப்பிட்ட சடலங்கள் உடனடியாக அடையாளங் காணப்படவில்லை.

சடலங்கள் பிரேத பரிசோதனைக்காக தற்போது வவுனியா பொது வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளன.

இந்தச் சடலங்கள் தொடர்பான விசாரணையைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (சி)

## புனித மடுப் பகுதியை நாசமாக்குதவதற்காக அரசு அங்கு தாக்குதல்களை நடத்துகிறது

### ஜயலத் ஜயவர்த்தனா குற்றச்சாட்டு

கொழும்பு,மே 28

மன்னார் மடு பகுதியைக் கைப்பற்றி அந்தப் புனித இடத்தை நாசமாக்கும் நோக்குடன் அங்கு அரசு தாக்குதலைத் தொடர்வதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜயலத் ஜயவர்தன குற்றம் சுமத்தியுள்ளார். அரசின் இந்த நடவடிக்கையைத் தடுத்து நிறுத்தும் முயற்சியில் ஐக்கிய தேசியக் கட்சி இறங்கவேண்டும் எனக் கோரி அவர் இன்று அக்கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்கவுக்கும் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் கடிதங்களை அனுப்பவுள்ளார்.

இது தொடர்பாக ஜயலத் ஜயவர்தன உதயனுக்குக் கருத்துத் தெரிவிக்கையில் கூறியதாவது:-

மன்னார் மடுப்பகுதி 600 வருடங்கள் பழைமைவாய்ந்த புனிதமான பிரதேசமாகும். அந்த இடத்தை கிறிஸ்தவர்கள் மாத்திரமன்றி அனைத்து மதத்தவர்களும் தரிசிக்கின்றனர்; மதிக்கின்றனர்.

அந்தப் புனித இடத்தைக் கைப்பற்றி அந்தப் புனிதத்தைக் கெடுக்க அரசு முயற்சி செய்து வருகின்றது. இதன் காரணமாக அங்கு தாக்குதல் நடவடிக்கையில் அரசு ஈடுபட்டு வருகிறது.

போரின்போது வணக்கஸ்தலங்கள் அழிக்கப்பட்டமைக்கான பொறுப்பை. அரசே ஏற்கவேண்டும். அரசு இந்த மடுப் பிரதேசத்தையாவது விட்டுவைக்க வேண்டும் என்று நான் அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

(06ஆம் பக்கம் பார்க்க)

## ஓமந்தை சோதனை நிலையத்தை திறப்பதற்கு புலிகள் உத்தரவாதம்

கொழும்பு,மே 28

ஓமந்தை சோதனைச் சாவடியை அண்டியுள்ள யுத்தசூனியப் பிரதேசத்தில் தாக்குதல்களை மேற்கொள்ளப் போவதில்லையென விடுதலைப் புலிகள் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவினரிடம் உத்தரவாதம் வழங்கியுள்ளனர் என கிளிநொச்சியிலிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி கடந்த வாரம் கிளிநொச்சி சென்றிருந்தார். அவர் நேற்றுமுன்தினம் கிளிநொச்சியில் புலிகளின் துணை அரசியல் துறைப் பொறுப்பாளர் தங்கனைச் சந்தித்துப் பேச்சு நடத்தினார். அப்போது புலிகள் மேற்படி உத்தரவாதத்தை வழங்கியதுடன் கடந்த செவ்வாய்க்கிழமை செஞ்சிலுவைச் சங்க வாகனம் மீது புலிகளின் துப்பாக்கி வேட்டுகள் இலக்குத் தவறிப்பட்டது குறித்தும் வருத்தம் தெரிவித்தனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

(06ஆம் பக்கம் பார்க்க)

## விசேட அதிரடிப்படையினர் தொப்பிகல நோக்கி தாக்குதல்

### புலிகளின் ஷெல் வீச்சில் 18 பேர் காயம்

கொழும்பு,மே 28

குடும்பிமலை (தொப்பிகல) காட்டுப் பகுதியில் விடுதலைப் புலிகள் நிலைகொண்டுள்ளனர் எனக் கூறப்படும் பகுதி நோக்கி விசேட அதிரடிப்படையினர் நேற்றுத் தாக்குதல் நடவடிக்கையில் ஈடுபட்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

மட்டக்களப்பு நகரில் இருந்து 36 கிலோ மீற்றர் தொலைவில் உள்ளது குடும்பிமலை. நேற்றுக்காலை முதல் விசேட அதிரடிப்படையினர்

(06ஆம் பக்கம் பார்க்க)

## புறக்கோட்டை குண்டுத் தாக்குதல்: இதுவரை 50 பேரிடம் விசாரணை

கொழும்பு,மே 28

புறக்கோட்டை - றெக்ளமேசன் வீதியில் இடம்பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவம் தொடர்பாக இதுவரை ஐம்பதுக்கும் மேற்பட்டோர் பொலிஸாரால் விசாரணைக்குட்படுத்தப்பட்டிருக்கின்றனர்.

இவர்களிடம் பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையில் மேலதிக விசாரணைகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த மேலதிக விசாரணைகள் 3 விசேட பொலிஸ்குழுக்களால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவினர் தெரிவித்துள்ளனர். (சி)

## அம்பாறையில் கிளைமோர் மூன்று பொதுமக்கள் பலி!

கொழும்பு,மே 28

அம்பாறை, அக்கரைப்பற்று பொத்துவில் காஞ்சிரங்குடாவில் நேற்று மாலை இடம்பெற்ற கிளைமோர் தாக்குதலில் மூன்று பொதுமக்கள் பலியாகியுள்ளனர்.

நேற்றுமாலை 7 மணியளவில் காஞ்சிரங்குடா படைமுகாமுக்கு உணவுப் பொருள்களை விநியோகித்து விட்டு திருக்கோவில் கோட்டை விகாரைப் பகுதியில் பயணம் செய்துகொண்டிருந்த கனரக வாகனமொன்றே கிளைமோரில் சிக்கியது என்று கூறப்படுகிறது.

இதனையடுத்து அப்பகுதியில் விசேட அதிரடிப்படையினரும் பொலிஸாரும் தேடுதல்களில் ஈடுபட்டனர். (சி)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாவது பிறந்தநாள் வாழ்த்து



வேலணை மேற்கு, 6ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த
E.K.அருளானந்தன்-ரதீஸ்வரி தம்பதியரின்
செல்வப் புதல்வன்

**விசாகன்** *(விசால்)*

தனது முதலாவது பிறந்த நாளை இன்று (28.05.2007) திங்கட்கிழமை தனது இல்லத்தில் சிறப்பாகக் கொண்டாடுகின்றார்.
இவர் சீரும்சிறப்புடனும் பல்லாண்டு காலம் வாழ அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா, பெரியப்பா, பெரியம்மா, சித்தப்பாமார், சித்திமார், அக்காமார், அண்ணாமார், மாமாமார், அத்தைமார், மச்சான்மார், மச்சாள்மார் மற்றும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் நயினாதீவு நாகபூசணி அம்பாளின் அருள்பெற்று வளமுடன் வாழ வாழ்த்துகின்றார்கள்.

(60960) **6ஆம் வட்டாரம், வேலணை மேற்கு, வேலணை.**

# சேவைநலன் பாராட்டு விழா



திருமதி
**சந்திரகுமாரி பரமேஸ்வரன்**
(இல. ஆசிரிய சேவை தரம்- I)

கல்விப் பணியில் 32 வருடங்களாக சிறப்புடன் சேவையாற்றி தமது அறுபதாம் அகவையில் ஓய்வுபெறும் எமது வித்தியாலய ஆசிரியை ஓய்வு காலத்தில் சீருடனும் சிறப்புடன் பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றோம்.

*அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,*
**யா/கனகரத்தினம் ம.ம.வி.**
(66984)

வசீகர தோற்றத்திற்கு
# சந்தனாலேப
(குளிர்ச்சி தரும் ஆயுர்வேத மேல் பூச்சு மருந்து)




வெண்சந்தனம், மரமஞ்சள், [illegible]
[illegible] தேசிய ஆயுர்வேத ஔடதங்களின் கலவை. [illegible]
[illegible] சருமத்தை [illegible]
[illegible] வசீகர முக அழகைத் தரும். [illegible]
சரும கருங்குதல், [illegible] போன்ற சரும நோய்களைப் பூரணமாகக் குணப்படுத்தும்.
[illegible] சருமத்தை [illegible] தோற்றத்தைத் தரும்.

*யாழ்.மாவட்ட ஏக விநியோகஸ்தர்*
**'சிவா நறுமணப் பூங்கா'**
*288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.*
T.Phone: 222 2567

*சகல பார்மஸிகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.*

MANUFACTURED By:
SAN JEEWAKA AYURVEEDIC PRODUCTS
VEYANGODA, SRI LANKA. AYY PRO NO: REGNO A/L 250

# காணி விற்பனைக்கு

மல்லாகத்தில், கே.கே.எஸ். வீதிக்கு அண்மையில் (பழைய சோடாக் கொம்பனி ஒழுங்கை) கிணற்றுடன் கூடிய 2½ பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு: **0777242198**
S.ஆனந்தசபாபதி, அம்பனை வீதி, அளவெட்டி.
(அழகொல்லைப் பிள்ளையார் கோயிலடி) (60954)

# பகுதி வீடு

*ஆறுகால் மடம், வண்.மேற்கில் கௌரவமான குடும்பப் பெண்கள், 2, 3 பேர் தங்குவதற்கு பகுதி வீடு* **(Annex)** *உண்டு.*
*விளம்பர இல. 2974,*
*மே/பா உதயன்.*
(60976)

# மணமகள் தேவை

*யாழ்.றோமன் கத்தோலிக்க, கௌர குடும்பம், அரச தொழில் புரியும்* **MSc.** *பட்டதாரி, 35 வயது மணமகனுக்கு தகுந்த மணமகள் தேவை.*
*தொடர்பு:*
*90, கடற்கரை வீதி,*
*நாவாந்துறை, யாழ்ப்பாணம்.*
(60982)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



*எமது பாடசாலையின் அதிபர்*
**நா.சிவநேசன்**
*அவர்கள் யாழ்.பல்கலைக்கழகத்தில் முதுகல்விமாணிப் பரீட்சையில்* **(M.Ed.)** *சித்தியடைந்ததையிட்டு எமது வாழ்த்துக்களை மனதாரத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறோம்.*
**ஆசிரியர் நலன்புரிக் கழகம்,**
**யா/ மயிலணி சைவ மகா வித்தியாலயம்.**


## TENDER NOTICE

The Director, Teaching Hospital, Jaffna will invite Tenders from qualified Contractors for Private Security Service up to 10.00 a.m. on 13.06.2007. Tender forms are issued up to 08.06.2007. The Tender forms are issued at my Office on payment of non refundable deposit of 3,000/-. Tender forms received after 13.06.2007 will be rejected. The conditions and other details will be supplied with the Tender forms.

**Dr.A.E. Gnanajothy,**
**Director,**
**T.H.Jaffana.** (C/52497)

## ST.JOHN'S COLLEGE
## JAFFNA
## OLD BOYS' ASSOCIATION
## ANNUAL GENERAL MEETING

The 91st Annual General Meeting of the Old Boys' Association will be held on Saturday the 02nd of June 2007 at 9.00 a.m. in the College Auditorium.

**PROGRAMME FOR THE DAY**

07.00 a.m. - Holy Communion Service
08.00 a.m. - Fellowship Breakfast
09.00 a.m. - Annual General Meeting

**AGENDA**

1. Prayer
2. Vote of condolence
3. Minutes of the last AGM
4. Principals review
5. Annual report
6. Statement of accounts
7. Election of office bearers

10.00 a.m. - Cricket match (Old Boys' Vs Present Boys')
01.00 p.m. - Fellowship lunch
01.30 p.m. - Cricket match (Continued)
03.30 p.m. - Soccer match (Old Boys' Vs Present Boys')
04.00 p.m. - Principals Tea

No individual invitations would be sent

Breakfast (Rs.100/-), Lunch (Rs.250/-), Breakfast & Lunch (Rs.300/-) Tickets are available from the Treasurer Mr.Nanthakumaran at the college till 30 th of May 2007.

**V.Sanjeev**
**Asst.Secreraty.**
(C/52493)

# கண்ணீர் அஞ்சலி

*யாழ்.போதனா வைத்தியசாலையில் தாதிய உத்தியோகத்தராகக் கடமைபுரியும்*
**திருமதி T.சண்முகராசா**
*அவர்களின் அன்புக் கணவர்*
**நமசிவாயம் சண்முகராசா**
*அவர்கள் காலமானதையிட்டு துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்.*

***யாழ்.போதனா வைத்தியசாலை,***
***தாதிய உத்தியோகத்தர்,***
***நலன்புரிக் கூட்டுறவுச் சங்கம்.***
(60994)

# 31ஆம் நாள் நினைவலைகள்

அமரர்
**மங்கையர்க்கரசி பகவான்**



மலர்வு: 01-11-1932
உதிர்வு: 28-04-2007

*அன்னையாய் இல்லத்து*
*அரசியாய் தலைவியாய்*
*பின்னை எவர்க்கும் நல்*
*உறவினராய் குலம் தழைக்க*
*மன்னு புகழோங்க குடும்பத்தை*
*வழிநடத்தி*
*இன்னும் பல்லாண்டு எமை*
*அணைத்து வாழாமல்*
*கண்மறைந்து போனதெங்கே?*
*கதறுகின்றோம் கருத்திழந்து*
*கண்ணீரைக் காணிக்கையாக்கி*
*அஞ்சலிக்கின்றோம்*

*மட்டுவில் தெற்கு,*
*சாவகச்சேரி.* (61004)
**கணவர், பிள்ளைகள்,**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

# 5ஆம் ஆண்டு நினைவலைகள்

**திருமதி மார்க்கண்டு இராசமலர்**



அல்லும் பகலும் ஆதரித்தெமை அணைத்த
அன்பினை நினைத்தேயழுகின்றோம் தங்கள்
ஆத்மசாந்திக்கு ஆண்டவரிடம்
வேண்டித் தினமும் தொழுவோம்

*கே.கே.எஸ். வீதி,*
*மருதனார்மடம்.*
**குடும்பத்தினர்.**

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



**திருமதி கதிரேசு சின்னத்தங்கச்சி**

தோற்றம் 14.06.1945
மறைவு 28.04.2007

அம்புலி காட்டி அமுதினை
ஊட்டுவாய் அம்மா
மேலெல்லாம் இழைத்திட பாடுபட்டாய்
நேர்மையாய் நாம் வாழச் செய்தாய்

இன்று (28.05.2007) திங்கட்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறுகின்ற ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**க.கிருபாகரன்**
[illegible]

# 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
**இளையதம்பி நடனமூர்த்தி**



தோற்றம்: 07.05.1933
மறைவு: 23.05.2002

*பாசமுற்ற தந்தையாய் இருந்தாய் ஐயா!*
*பண்புடனே எங்களை வளர்த்தாய் ஐயா!*
*துன்பம் என்றால் எதுவென்று அறியோம் - நாங்கள்*
*இப்போ ஆறாத் துயரமதில் ஆளாகி இருக்கின்றோம் ஐயா!*

*என்றும் நினைவுடன்:*
**அன்பு மனைவி, பிள்ளைகள்,**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

*6ஆம் வட்டாரம்,*
*மண்டைதீவு.* (60980)

# மரண அறிவித்தல்

*திருமதி சின்னையா சின்னம்மா*

ஆவரங்காலைப் பிறப்பிடமாகவும் ஆனைக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா சின்னம்மா 26.05.2007 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் சின்னையாவின் அன்பு மனைவியும் வசந்தி, காலஞ்சென்ற வசந்தகுமார் ஆகியோரின் அன்புத் தாயும் சின்னமணி, றஞ்சிதராணி ஆகியோரின் மாமியும் நிரோசன், அனுசன், யூலி, நிரஞ்சனா (ஜேர்மனி), பிரதீபா, பார்த்தீபன், கார்த்தீபன் ஆகியோரின் பேத்தியும் கண்மணி, இராசம்மா, நல்லம்மா, அழகதுரை ஆகியோரின் சகோதரியும் மகாலிங்கம், ரஞ்சிதமலர்,கந்தையா ஆகியோரின் மைத்துனியும் ஜெயமோகனின் பெரிய தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (27.05.2007) ஞாயிற்றுக்கிழமை ஒரு மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் காக்கைதீவு இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**சின்னையா (கணவர்),**
**மகள், மருமக்கள்.**

*கூழாவடி,*
*ஆனைக்கோட்டை.*
(61000)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





யாழ்.மாநகராட்சி மன்ற சைவசமய விவகாரக் குழு நடத்திய சமய அறிவுப் போட்டியின் பரிசளிப்பு விழா கடந்த வெள்ளிக்கிழமை யாழ்.நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

யாழ்.மாநகர சபை ஆணையாளரும் குழுவின் தலைவருமான மு.செ.சரவணபவ உரையாற்றுவதை முதலாவது படத்திலும்-

நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ்.மாநகர சபை முன்னாள் ஆணையாளரும் குழுவின் முன்னாள் தலைவருமான சி.வி.கே. சிவஞானம் வெற்றி பெற்ற மாணவன் ஒருவருக்குப் பதக்கம் அணிவிப்பதை இரண்டாவது படத்திலும்-

விழாவில் கலந்து கொண்டவர்களில் ஒரு பகுதியினரை அடுத்துள்ள படத்திலும் காணலாம். *(படங்கள்: லக்ஸ்மன்)*

# இடம்பெயர்ந்து தற்காலிகமாகக் கடமைபுரியும் ஆசிரியர்களுக்குச் சம்பளம் வழங்க ஏற்பாடு

அச்சுவேலி, மே 28

நியமனம் வழங்கப்பட்ட பாடசாலைகளில் இருந்து இடம்பெயர்ந்து வேறு மாவட்டங்களில் தற்காலிக இணைப்புச் செய்யப்பட்டுள்ள ஆசிரியர்களின் சம்பளக் கொடுப்பனவை வழங்குவதற்கான ஏற்பாடுகளை கல்வி அமைச்சு செய்துள்ளது.

கடந்த வருடம் ஓகஸ்ட் 11ஆம் திகதிக்குப் பின்னர் நிலவும் அசாதாரண சூழ்நிலையாலும், ஏ-9 பாதை மூடப்பட்டதை அடுத்தும் தமது சொந்தக் கடமை நிலையங்களுக்குத் திரும்ப முடியாத நிலையில், தங்கி நிற்கும் இடங்களில் தற்காலிக இணைப்புச் செய்யப்பட்ட வெளிமாகாணங்களைச் சேர்ந்த ஆசிரியர்களில் குறிப்பிட்ட பகுதியினருக்கு இதுவரை எந்தவிதமான ஊதியக் கொடுப்பனவும் வழங்கப்படவில்லை.

கடந்த 10 மாதங்களாக இவர்களுக்கு சம்பளக் கொடுப்பனவு வழங்கப்படாமல் இருப்பதைக் கருத்தில் கொண்டு இவர்களுக்கான சம்பளக் கொடுப்பனவுகளை நிதிப்பிரமாணக் குறிப்பின் பிரகாரம் சம்பந்தப்பட்ட மாகாணக் கல்வி அமைச்சுக்கள் மூலம் பெற்றுத் தற்காலிக இணைப்புச் செய்யப்பட்ட இடங்களில் வைத்து வழங்குவதற்கான ஏற்பாடுகளை கல்வி அமைச்சு செய்துள்ளது.

இது தொடர்பான சுற்றறிக்கையினை சம்பந்தப்பட்ட மாகாண கல்வி அமைச்சுக்கள், வலயக் கல்வி அலுவலகங்கள் என்பவற்றுக்கு கல்வி அமைச்சு கடந்தவாரம் அனுப்பி வைத்துள்ளது.

இது தொடர்பாக கல்வி அமைச்சின் பதில் செயலாளர் தில்லைநடராசா தகவல் தருகையில்:

தற்காலிக இணைப்புச் செய்யப்பட்டுள்ள ஆசிரியர்களின் கடமைப் பொறுப்புகள், நேர அட்டவணை, மாதாந்த லீவு விவரம், வரவுப் பதிவு அறிக்கை என்பனவற்றை சம்பந்தப்பட்ட பாடசாலை அதிபர்கள் நிரந்தரமாக நியமிக்கப்பட்ட பாடசாலை அதிபர்களுக்கு அனுப்பி அவர் ஊடாக வலயக் கல்விப் பணிப்பாளருக்கு அறிக்கை செய்வதன் மூலம் ஆசிரியர்களின் சம்பளத்திற்கான நிதியை மாகாணக் கல்வி அமைச்சு தற்காலிக இணைப்பு செய்யப்பட்டுள்ள பாடசாலையில் வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது எனத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் தற்காலிக இணைப்புச் செய்யப்பட்டுள்ள ஆசிரியர்கள் தமது சம்பளத்தைப் பெறுவதற்கும் ஏனைய சலுகைகளைப் பெறுவதற்கும் கல்வி அமைச்சுக்கு பெருமளவு ஆவணங்களைப் பதிவுத் தபால் மூலமும், பக்ஸ் மூலமும் அனுப்பி வருவது தேவையற்ற நிர்வாக நெருக்கடியை ஏற்படுத்தி வருவதால் அதனைத் தவிர்த்துக் கொள்ளுமாறும் தெரிவித்தார். (203-11)

## இலங்கை அதிபர் சேவை:

# பரீட்சைக்குத் தோற்றிய அனைவருக்கும் நேர்முகத் தேர்வில் தோற்ற ஏற்பாடு

இலங்கை அதிபர் சேவை தரம் 3, தரம் 2:II பதவிக்கு நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்குத் தோற்றிய அனைவரும் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான ஏற்பாடுகளை கல்வி அமைச்சு செய்துள்ளது.

இலங்கை அதிபர் சேவை தரம் 2:II இற்கான நேர்முகப் பரீட்சைகள் நாடளாவிய ரீதியில் எதிர்வரும் 20ஆம் திகதிக்கு முன்னரும் அதிபர் சேவை தரம் 3 இற்கான நேர்முகப் பரீட்சைகள் ஜூலை 20ஆம் திகதிக்கு முன்னரும் நடத்தி முடிப்பதற்கு ஏற்புடைய விதத்தில் மாகாண கல்வி அமைச்சுக்கள் தோறும் நேர்முகப் பரீட்சை சபைகள் நிறுவப்பட்டுள்ளன.

நேர்முகப் பரீட்சைகளை 9மாகாண கல்வி அமைச்சிலும் பொருத்தமான முறையில் நடத்தி முடிப்பதற்கு 25 நேர்முகப் பரீட்சை சபைகள் நிறுவப்பட்டுள்ளன. ஒவ்வொரு சபையிலும் மத்திய கல்வி அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் பிரசன்னமாய் இருப்பதற்கான ஏற்பாடுகளை மத்திய கல்வி அமைச்சு செய்திருப்பதாகக் கல்வி அமைச்சின் பதில் செயலாளர் தில்லை நடராசா தெரிவித்தார். (203-11)

# மோதல்கள், இடப்பெயர்வுகள் காரணமாக மட்டக்களப்பில் நெற்செய்கை மிகவும் பாதிப்பு!

கொழும்பு, மே 28

மட்டக்களப்பு மாவட்டத்தில் இவ்வருட ஆரம்பத்தில் இடம்பெற்ற மோதல்கள் மற்றும் இடப்பெயர்வுகள் காரணமாக நெற்செய்கை மிகமோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் நெற்பயிர்ச் செய்கைக்குப் பெரும் பங்காற்றும் மாவட்டங்களில் மட்டக்களப்பும் ஒன்று. எனினும் தற்போது இடம்பெற்றுவரும் யுத்தம் மற்றும் இடப்பெயர்வுகளால் மாவட்டத்தின் நெற்செய்கை பெரும் வீழ்ச்சியடைந்துள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

கடந்த பெரும்போகப் பயிர்ச்செய்கை மற்றும் தற்போது மேற்கொள்ள வேண்டிய சிறுபோகம் என்பவற்றின் மூலம் ஒரு லட்சத்து 42 ஆயிரத்து 668 மெற்றிக் தொன் விளைச்சல் மட்டக்களப்பு மாவட்டத்தில் இருந்து கிடைக்கும் என மதிப்பிடப்பட்டிருந்தது. எனினும் மதிப்பிடப்பட்டதிலிருந்து மூன்றில் ஒரு பங்கு விளைச்சலைக் கூடப் பெற முடியவில்லை என விவசாயிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.

இம்மாவட்டத்தின் நெல் உற்பத்தி வீழ்ச்சியடைந்ததால் நாட்டின் அனைத்துப் பாகங்களுக்குமான அரிசி விநியோகம் மிக மோசமாகப் பாதிக்கப்படும் என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.

அரசு வழங்கிய உறுதி மொழிகளை நம்பிக் கடந்த பெரும்போகச் செய்கையைத் தொடங்கிய போதும்/ மோதலால் செய்கை மோசமாகப் பாதிக்கப்பட்டது என விவசாயிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் இருபோகச் செய்கைகளும் பாதிப்பட்டுள்ளதால் 40ஆயிரத்துக்கும் மேற்பட்ட விவசாயக் குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. இவர்களுக்கான உதவிகளைப் பெற்றுக் கொடுக்க உரிய அமைச்சுகளை அணுகியுள்ளோம்- என்றார். (202)

# இராணுவச் சோதனை நிலையங்கள் மூடப்பட்டதால் அவசர நோயளர்கள் வவுனியா செல்ல முடியாத நிலை

வவுனியா, மே 28

ஓமந்தை மற்றும் உயிலங்குளம் ஊடான போக்குவரத்து தடைப்பட்டுள்ளதால் வன்னியில் இருந்து அவசர நோயாளர்கள் வவுனியா செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

ஓமந்தை மற்றும் உயிலங்குளம் ஆகிய இடங்களில் உள்ள சோதனை நிலையங்கள் கடந்த நான்கு நாள்கள் மூடப்பட்டுள்ளன.

இதன் காரணமாகக் கிளிநொச்சி வைத்தியசாலையில் இருந்து வவுனியா வைத்தியசாலைக்கு அவசர நோயாளர்கள் செல்ல முடியாதுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்த நோயாளர்களை வவுனியா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்ல செஞ்சிலுவைச் சங்கத்திடம் உதவி கோரப்பட்டுள்ளது. (1)

## யாழ்.நகரப் பகுதியில்

# சுத்தமற்ற தண்ணீர் பயன்படுத்தி 'சர்பத்' தயாரிப்பு: உற்பத்தி செய்வதற்குத் தற்காலிகத் தடை விதிப்பு!

குருநகர், மே 28

யாழ்.நகரில் கைவண்டில் வியாபாரிகள் 'சர்பத்' உற்பத்திக்குப் பயன்படுத்தும் தண்ணீர் சுத்தமற்றது எனக் கண்டுபிடிக்கப்பட்டு உற்பத்தி தற்காலிகமாகத் தடைசெய்யப்பட்டுள்ளது.

இத்தகவலை யாழ்.சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ம.மரியதாசன் தெரிவித்தார்.

யாழ்.நகரில் பஸ்நிலையத்திற்கு அண்மையில் வைத்துக் கைவண்டில்களில் சர்பத் உற்பத்தி செய்யப்படும் இடங்களில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் திடீர்ப் பரிசோதனைகளை மேற்கொண்டனர். அதன்போது சுத்தமற்ற தண்ணீரைப் பயன்படுத்தி சர்பத் தயாரிப்பது கண்டறியப்பட்டது.

இதனையடுத்து அப்பகுதியில் சர்பத் வியாபாரம் செய்வது தற்காலிமாக நிறுத்தப்பட்டுள்ளது- என்று அவர் மேலும் தெரிவித்தார். (202-51)

# உள்ளூராட்சி சபைகளின் அபிவிருத்தி வேலைகளுக்கு நிதி

யாழ்ப்பாணம், மே 28

குடாநாட்டில் உள்ள 13 உள்ளூராட்சி சபைகளுக்கும் இவ்வாண்டு 10 லட்சம் ரூபா வீதம் மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் நிதி ஒதுக்கீடு செய்துள்ளார்.

பிரமாண அடிப்படையில் மூலதன வேலைத் திட்டத்தின் (CBG) கீழ் ஒவ்வொரு பிரதேச சபைக்கும் 10லட்சம் ரூபா வழங்கப்பட்ட கருத்திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதன் மூலம் சனசமூக நிலையம், முன்பள்ளி, கடைத்தொகுதி, சந்தைகள் மற்றும் நிர்மாண வேலைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

இதேவேளை- கடந்த வருடம் பிரமாண அடிப்படையிலான மூலதன வேலைத்திட்டத்திற்கு ரூபா 5 லட்சம் மட்டுமே ஒவ்வொரு பிரதேச சபைகளுக்கும் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (203-95)

# விவசாய டிப்ளோமா கற்கைக்கு விண்ணப்பிக்கலாம்

இலங்கை விவசாயக் கல்லூரிகளில் நடத்தப்படும் இரண்டு வருடங்களுக்கான விவசாய டிப்ளோமா பயிற்சி நெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரி ஜி.சீ.ஈ. சாதாரண தரத்தில் கணிதம், தமிழ், விஞ்ஞானம் என்பவற்றுடன் விவசாய விஞ்ஞானம் அல்லது சமூகக்கல்வியில் திறமைச் சித்தியுடன் ஆறு பாடங்களில் சித்தி அடைந்திருக்கவேண்டும்.

ஜி.சீ.ஈ. உயர்தரத்தில் விஞ்ஞானப் பிரிவில் 3 பாடங்களும் சித்தி அடைந்தவர்களும் இந்தப் பயிற்சி நெறிக்கு விண்ணப்பிக்கமுடியும்.

தமிழ், சிங்கம், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் இப்பயிற்சி நெறிகள் இடம்பெறவுள்ளன.

மேலதி விவரங்களைப் பிரதேச செயலகங்கள், உதவி அரசாங்க அதிபர் அலுவலகங்கள் மற்றும் விவசாய விரிவாக்கல் திணைக்களம் என்பவற்றில் அறிந்துகொள்ளமுடியும்.

அல்லது 04.05.2007ஆம் திகதியிட்ட வர்த்தமானியில் பார்வையிடலாம். விண்ணப்பிப்பதற்கான இறுதித் திகதி எதிர்வரும் ஜூலை 6ஆம் திகதியாகும். அனுமதிப்பரீட்சை எதிர்வரும் ஓகஸ்ட் 31ஆம் திகதி நடைபெறவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (202-68)

# நவாலி விவசாயக்கிராமம் அபிவிருத்தி செய்யப்படுகின்றது

யாழ்ப்பாணம், மே 28

நவாலி விவசாயக் கிராமம் அகதிகள் புனர்வாழ்வுக் கழகத்தினால் அபிவிருத்தி செய்யப்பட்டு வருகின்றது.

இக்கிராமத்தின் விவசாய வ[illegible]ச்சி அபிவிருத்திக்கான நடவடிக்கையினை அகதிகள் புனர்வாழ்வுக் கழகத் தலைவர் பேராசிரியர் வி.பி.சிவநாதன் மேற்கொண்டுள்ளார்.

இதன் முதற்கட்டமாக ஜே-134 நவாலி வடக்கு கிராம அலுவலர் பிரிவிற்குட்பட்ட, விவசாயத் துறையில் முழுமையாக ஈடுபடும் 32 பேருக்கு கச்சான் பயிர்ச்செய்கையை ஊக்குவிக்கும் பொருட்டு ஒவ்வொரு விவசாயிக்கும் 40 கிலோ கச்சான் வீகிதம் நவாலி வடக்கு ச.ச. நிலையத்தில் வைத்து வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை கடந்த வாரம் வீட்டுத் தோட்ட பயிர்ச் செய்கையை மேம்படுத்தும் நோக்கில் 41 விவசாயிகளுக்கு மிளகாய், கத்தரி, வெண்டி, பூசணி, கீரை போன்ற தானியங்களின்விதைகள் வழங்கப்பட்டுள்ளன. (203-95)

## சமய சந்நிதிகளில்

புலோலி காந்தியூர் வற்றாப்பளை கண்ணகை அம்மன் ஆலய வருடாந்தப் பொங்கலும் வேள்வியும் நாளை செவ்வாய்க்கிழமை இடம்பெறவுள்ளன. (203-160)

* * *

புலோலி வடமேற்கு முருகன் ஆலய மணவாளக் கோலமும் சங்காபிஷேகமும் இன்று நடைபெறவுள்ளன. (203-160)

* * *

நல்லூர் தெற்கு கற்பக விநாயகர் ஆலயத் தேர்த்திருவிழா நாளை மறுதினம் புதன்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளது.

மறுநாள் காலை 8மணிக்குத் தீர்த்தத்திருவிழா இடம்பெறும். (203-111)

* * *

கோப்பாய், இருபாலை கற்பக விநாயகர் ஆலயப் பெருந்திருவிழா நேற்று ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

எதிர்வரும் 10ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்குத் தேர்த்திருவிழாவும் மறுநாள் முற்பகல் 10 மணிக்குத் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன. (203)

# திருகேதீஸ்வர ஆலய தேர்த்திருவிழா நாளை

திருக்கேதீஸ்வர ஆலயத் தேர்த்திருவிழா நாளை செவ்வாய்க்கிழமை இடம்பெறவுள்ளது.

நாளை மறுதினம் புதன்கிழமை பாலாவித் திருக்குளத்தில் தீர்த்தத்திருவிழா இடம்பெறும்.

இவ்வாலயப் பெருந்திருவிழா கடந்த 21ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

யாழ்.குடாநாட்டில் உள்ள பாடசாலைகளின் மாணவர்கள் [illegible] திருவிழா உபயகாரர்களாகப் பூசைகளை நடத்தி வருவது வழமை.

இவ்வருடம் போக்குவரத்துச் செய்ய முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளதால் அதற்கென சேகரித்த நிதியை ஆலயத்திற்கு அனுப்பி வைத்துள்ளனர். (203)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விமானப் பொதிகள் சேவை

உங்கள் பொதிகள் யாழ்.-கொழும்பு அல்லது கொழும்பு-யாழ். தினசரி விமானம் மூலமாக உடனடியாக அனுப்பி வைக்கப் படும். வியாபாரிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும். கிளியரன்ஸ் இல்லாத பொருள்களுக்கு M.O.D பெற்று உத்தர வாதத்துடன் அனுப்பி வைக்கப்படும்.

**EURO GROUP**

**077 3846998, 011 4542190**

## கொழும்பு - யாழ் - கொழும்பு விமான சேவை

கொழும்பு - யாழ். விமானப் பயணிகளின் நலன் கருதிப் புதிய பயணிகள் விமான சேவை விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

பொதிகளும் ஏற்றுக்கொள்ளப்படும். முன்கூட்டியே உங்கள் ஆசனங்களைப் பதிவுசெய்து கொள்ளவும்.

மேலதிக விவரங்களுக்கு:

EURO GROUP
077 3846998
011 4542190

(சி/52441)

## சேவல் குஞ்சு விற்பனைக்கு

3 நாள் நிரம்பிய சேவல் குஞ்சு விற்பனைக்கு உண்டு. விலை 50/=

NEW R.S.K FARM
மான்ஸ் பாடசாலை வீதி, உடுவில்.

## பரிசுத்த ஆவிக்கு ஜெபம்

எனக்கு ஒளியாயிருந்து உன்னத நிலையை நான் அடைய வழிகாட்டும் பரிசுத்த ஆவியே! உமது திருநாமம் அர்ச்சிக்கப்படுவதாக. உமது அருட்கொடைகள் மூலம் என் உள்ளத்தைப் பக்குவப்படுத்தி எனக்கு தீங்கு செய்தோரை நான் மன்னிக்க அருள் புரிபவரே, என் வாழ்வின் எச்சந்தர்ப்பத்திலும் எனக்கு உற்ற துணையாகிய உமக்கு இச்சிறிய செபத்தின் மூலம் நீர் செய்யும் சகலத்திற்கும் நன்றி கூறுகின்றேன். என் தேவைகள் எவ்வளவு கடினமாக இருப்பினும் எக்காரணம் கொண்டும் உம்மிலிருந்து விலகாமல் உம்மில் நிலைத்திருப்பேனென உறுதி கூறுகின்றேன். நானும் என்னால் நேசிக்கப்படும் அனைவரும் என்றென்றும் உமது முடிவில்லா மகிமையில் பங்கு பெற வேண்டுகின்றேன்.


''பரிசுத்த ஆவியே உமக்கு நன்றி''

- ஓர் அடியாள்.

(60982)

## கண்ணீர்த்துளிகளில் 31ஆம் நாள் நினைவஞ்சலி

அன்னை மடியில் 23 ★ 03 ★ 1955



ஆண்டவன் அடியில் 28 ★ 04 ★ 2007

அமரர்

### இராயப்பு யோசப் (யோகேந்திரன்)

பாசத்தின் புகலிடமே அப்பாச்சி
நாள்கள் 31 கடந்தாலும் ஆறவில்லை ஐயா
எம் மனத்துயரம்

உங்கள் உயிருக்கு உயிராக பாசமிகு மனைவி
நெஞ்சம் பதறிடத் துடித்துக் கொண்டிருக்க,
தேசம் கடந்து வாழும், உங்களை ஈன்றெடுத்த
தாயோ கண்ணீருடன் கதறித் துடிக்க,
பாசமிகு சகோதரர்கள் பரிதவித்திட
எம்மையெல்லாம் கலங்க வைத்துவிட்டு
கானல்நீர் போல் மறைந்து விட்டீரே ஐயா!

அன்பையும் அறிவையும் மட்டுமே எமக்கு
அகிலமாக்கினீரே அப்பாச்சி
நற்பண்புகளுக்கெல்லாம் அர்த்தம் தந்த
அன்பின் ஆலயமே,
ஆறுதலுக்கு ஆயிரம் வார்த்தைகள் இருந்தாலும்
நீங்கள் கூறும் ஒரு வார்த்தைக்கு ஈடாகுமா?
உள்ளம் நலிந்தோருக்கு எக்கணமும் ஊன்றுகோலாய் இருந்து
எத்துன்பத்திலும் மகிழ்ச்சியிலும் தூயவராய்
வாழ்ந்த தூயவரே,
நீங்கள் தந்த நல்வார்த்தைகள்தான்
இனி எமது எதிர்காலத்தை வழிநடத்தும்
ஆசீர்வாதங்கள் அப்பாச்சி

உங்களது பாசப்பிணைப்பு எம்மை உருக்குகின்றது
எம் இதயத்தினுள் தெய்வமாக அமர்ந்துவிட்ட
உம்மைக் காண வரம் ஒன்று தாரும் ஐயா!
நீங்கள் எடுத்து முடித்துக்கொண்ட இப்பிறவி
ஏழேழு ஜென்மத்திற்கு நிலைத்திட,
எங்கும் உங்கள் உயிரின் உறைவிடமான அம்மாவுக்கு
திடமான மனவலிமையைத் தாரும் அப்பாச்சி.

23/1, புது வீதி,
பாஷையூர்.

நெஞ்சம் பரிதவிக்கும்:
அன்பு மனைவி,
பிள்ளைகள்.

## 31 ஆவது நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

### அமரர் செல்லையா சின்னத்துரை

(கிளாக்கர், பலாலி)

திதி: பூர்வபக்க ஏகாதசி



மலர்வு: 06 ★ 04 ★ 1944

உதிர்வு: 28 ★ 04 ★ 2007

பாசத்தின் பிறப்பிடமாய் பண்பின் உறைவிடமாய்
எங்கள் மனதில் அணையாத் தீபமாய்
எங்கள் உள்ளமெல்லாம் உறையும் அன்புத் தெய்வமாய்
எம்மையெல்லாம் கதிகலங்க வைத்து வானுலகம் சென்றீரே
31 நாள் கழிந்தாலும் மறக்கவில்லை உங்கள் நினைவுகள்
எங்கள் உள்ளங்களில் உங்கள் நினைவுகளோடு வாழுகிறோம்.

கடந்த 28.04.2007 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டு அனுதாபம் தெரிவித்த அனைவருக்கும் பல வகையில் உதவி செய்தவர்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவிப்பதோடு இன்று (28.05.2007) திங்கட்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

சரசாலை தெற்கு,
சாவகச்சேரி. (60937)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

## நெஞ்சை விட்டகலாத... முதலாம் ஆண்டு நினைவலைகள்



### அமரர் விஸ்வலிங்கம் பரணீதரன்

**தோற்றம்**
29 ★ 05 ★ 1977

திதி: துவாதசி

**மறைவு**
08 ★ 06 ★ 2006

பண்பின் சிகரமாய்
பரிவுக்கு உதாரணமாய்
பாசத்தின் உறைவிடமாய்
அன்புக்கு அடிமையாய்
அடக்கத்தின் ஆணிவேராய்
இரக்கத்தின் இருப்பிடமாய்
கடமை வீரனாய்
கண்ணியத்தின் காவலனாய்
நேர்மைக்கு இலக்கணமாய்
பெரியோர் சிறியோர் பேதமின்றி
யாவர்க்கும் இனியவனாய்
இப்பூவுலகில் வாழ்ந்து
எம்மையெல்லாம்
ஆறாத்துயரில் ஆழ்த்தி
சோகக்கடலில் மூழ்கவிட்டு
மீளாத் துயில் கொண்ட
எமதருமை மகனே!
ஓராண்டு பூர்த்தியுறும் இந்நாளில்
உமக்கு நற்பேறு கிடைக்க
இறைவனை மன்றாடுகின்றோம்.

'துர்க்கா துளபம்',
கோப்பாய் வடக்கு,
கோப்பாய்.

(60975)

அப்பா, அம்மா, சித்தி,
மற்றும் உறவினர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# நிஜப்போரும் நிழல்போரும்

ஆங்கில வார இதழில் பாதுகாப்பு நிலைவரம் பற்றிய விடயங்களை வரையும் பிரபல இராணுவ விமர்சகர் ஒருவர் இலங்கையில் இரண்டு விதமான யுத்தங்கள் கட்டவிழ்ந்திருக்கின்றன எனக் குறிப்பிட்டிருக்கின்றார்.

ஒன்று - அரசுப் படைகளுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் களத்தில் வெடித்துள்ள போர்.

மற்றது - அரசுத் தரப்பு கட்டவிழ்த்து விட்டிருக்கும் பிரசாரப் போர்.

இராணுவ இழப்புகள் பற்றிய உண்மைகளை மறைத்து இந்த ஊடகத்துறைப் போரில் அரசுத் தரப்புச் செய்யும் பிரசாரத் தந்திரோபாயத்தை அவர் கோடிகாட்டியிருக்கின்றார்.

இதற்கு அப்பாலும் இதில் ஒரு விடயம் உள்ளது.

முதலாவது வகைப் போரில் அரசுப் படையினரும், புலிகளும், அத்தோடு இடையில் சிக்கி அப்பாவிகளும் உயிரிழக்கின்றார்கள்.

மற்றைய ஊடகப் போரில் சிங்கள, ஆங்கில ஊடகவியலாளர்கள் அச்சுறுத்தலுக்கு உள்ளாகின்றனர் என்றால், தமிழ் ஊடகவியலாளர்களோ அந்த அச்சுறுத்தலையும் தாண்டி உயிர்ப்பலி கொடுக்கும் நிலைக்கு ஆளாகின்றனர்.

அதுவும் இந்த ஊடகப் போரில் களப்பலி கொடுத்து, விழுப்புண் கண்ட தமிழ் ஊடகங்களின் வரிசையில் உங்கள் 'உதயன்', 'சுடர் ஒளி'க்கு முதலாவது இடம். இந்த ஒன்றரை வருட காலத்துக்குள் ஐந்துக்கும் அதிகமான பணியாளர்களின் உயிர்களை இந்நிறுவனங்கள் காவு கொடுத்து விட்டன. பல ஊழியர்கள் படுகாயமடைந்திருக்கின்றனர். சேமிப்புக் களஞ்சியங்கள், தொழில்நுட்பத் தொடர்பாடல் சாதனங்கள், வாகனங்கள் தாக்கப்பட்டு, எரிக்கப்பட்டு, நாசமாக்கப்பட்டுள்ளன. கிழக்கில் பல பிரதேசங்களில் 'சுடர் ஒளி' விநியோகம் கருணா குழுவினால் பலவந்தமாக - அச்சுறுத்தி - தடுத்து நிறுத்தப்பட்டிருக்கின்றது. அது குறித்து பாராமுகமாக இருப்பதன் மூலம் ஊடகத்துக்கு எதிரான இந்த ஆயுத அராஜகத்துக்கு துணையும் ஒத்துழைப்பும் ஒத்தாசையும் வழங்குகின்றது அரசு.

'உதயன்' நிறுவன பத்திரிகைத்தாள் களஞ்சியம், இனந்தெரியாதோரின் பெயரால் தீயிட்டு எரிக்கப்பட்டமை ஒரு புறம் என்றால், மறுபுறத்தில் உதயனுக்குத் தேவையான பத்திரிகைத்தாளை எடுத்துச் செல்ல அரச கெடுபிடி, தடை, கட்டுப்பாடு, மட்டுப்படுத்தல்கள், இடைஞ்சல்கள், முட்டுக்கட்டைகள் எல்லாம்.

இவ்வாறு களத்தில் ஆயுதப் போருக்குப் புறம்பாக ஊடகப் போர் ஒன்றும் அரூபக் கரங்களால் கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கின்றது. அதில் ஊடகவியலாளர்களுக்கு எதிராக - குறிப்பாகத் தமிழ் ஊடகவியலாளர்களுக்கு எதிராக - ஆயுதங்களும் தாராளமாகப் பயன்படுத்தப்படுகின்றன.

ஒரு பக்கத்தில் சிறுபான்மையினரான தமிழர்களின் நியாயமான உரிமைகளைப் பிடுங்கி, அவர்களை அடக்கி, ஒடுக்கி, அடிமைகளாக்குவதற்காக, அவர்களின் சுதந்திரத்தைப் பிடுங்கும் பேரினவாத அதிகாரப் போக்கு நிலை நிறுத்தப்படுகின்றது என்றால் -

மறுபக்கத்தில், அது பற்றிய உண்மைகள் உலகுக்குத் தெரிந்துவிடாமல் தடுக்கும் நோக்குடன் ஊடகங்களின் சுதந்திரத்தைப் பறிக்கும் அடிப்படை உரிமை மீறல் போக்கும் முழு அளவில் மேற்கொள்ளப்படுகின்றது.

புலிகளுக்கு எதிராக அரசும் படைத்துறையும் முன்னெடுக்கும் பிரசார யுத்தத் தந்திரோபாயத்துக்கு ஒத்துழைக்காத - அல்லது மற்றப்பக்க உண்மைகளை அம்பலப்படுத்துவதன் மூலம் அந்தத் தந்திரோபாய நகர்வுகளுக்கு முட்டுக்கட்டை போடுகின்ற ஊடகவியலாளர்கள் அல்லது போடுகின்ற ஊடகங்கள் என்று கருதப்படுகின்ற தரப்புகளே இந்தப் பிரசாரப் போரில் பெரும் பாதிப்புக்கு இலக்காகின்றன.

சமூகப் பிரக்ஞையுடன், சமூக விடுதலைக்காக உழைக்கும் ஊடகவியலாளன் அதன் மூலம் தனது இருப்பிற்கும் மற்றவர்களது வாழ்விற்கும் அர்த்தத்தைக் கொடுக்கிறான். அதுவும் அவலத்தில் சிக்குண்டு தவிக்கும் ஓரினத்துக்காகக் குரல் எழுப்பும் ஊடகவியலாளன் அந்த இனத்தின் விடுதலைக்கும் சுபீட்ச வாழ்வுக்கும் வழிகாட்டும் ஒளியாகின்றான்.

ஓர் ஊடகவியலாளன் தான் வாழும் சமூகத்தையும், அந்த சமூகத்தின் வாழ்நிலைப் பிரச்சினைகளையும், தனது மக்களின் அவலத்தையும், அபத்தத்தையும், நெருக்கடிகளையும், நோவுகளையும், துன்பங்களையும், துயரங்களையும் உதாசீனம் செய்து விலக முடியாது. வரலாற்று செல்நெறியிலிருந்து அவன் விலகி ஓட முடியாது.

அபத்தமான கட்டுகளிலிருந்து, அவலமான அடிமைத்தளையிலிருந்து தனது மக்களுக்கு நியாயத்தையும், நீதியையும் - சுதந்திரத்தையும் சமத்துவத்தையும் - கௌரவத்தையும் சுய அடையாளத்தையும் - மீட்டுக் கொடுக்கும் பணியில் ஊடகவியலாளனின் பொறுப்பும் கடமையும் ஒரு போராளிக்கு - போர் வீரனுக்கு - ஒப்பானது; நிகரானது; ஒரு வகையில் அதை விடவும் மேலானது.

இந்த உன்னத நோக்கத்தை - உயரிய விழுமியத்தை அடைவதற்காக சில சமயங்களில் ஒரு போராளி போல தன்னையே ஆகுதியாக்க வேண்டியவனாக அவன் ஆகிவிடுகின்றான். அதைத்தான் இலங்கைத் தமிழ் ஊடகவியலாளர்கள் இன்று எதிர்கொண்டு, சந்தித்து வருகின்றார்கள்.

அதிகாரச் சங்கிலிகளால் அடிப்படை உரிமைகளைப் பிணைத்து, நிஜவுலக நிர்ப்பந்தங்களால் மனிதனைக் கட்டுப்படுத்தி, அவனது சிந்தனையை மனவுலகச் சுவர்களுக்குள் அடைத்து, அவனின் சுதந்திரத்தைப் பறித்து, அவனை அடிமைச்சிறைக்குள் தள்ளும் எதேச்சாதிகாரக் கெடுபிடித்தனத்துக்கு எதிராக சுதந்திரக்குரல் எழுப்பி, சமூக மாற்றத்திற்கும், மனித விழிப்புணர்வுக்கும், சுதந்திர எழுச்சிக்கும் தூண்டுகோலாக அமையும் ஊடகவியலாளன் தனது வரலாற்றுக் கடமையை நிறைவு செய்தவனாகின்றான்.

அந்தப் பெரும் பொறுப்பை நிறைவேற்றும் சுமையோடு முன்நகருகின்றது தமிழ் ஊடகவியல்துறை.

இந்த வரலாற்றுப் பெரும் பொறுப்பை நிறைவு செய்வதற்காக அது சுமக்கவேண்டிய பாடுகள் இன்னும் எவ்வளவோ உள்ளன.

அவை சகிக்க முடியாமல் தகிக்கக் கூடியவை. ஆனாலும் சுட்டெரிக்கும் அந்தத் தீக்கடலைத் தனது சமூகத்துக்காக நீந்திக் கடக்கவேண்டியவனாகின்றான் ஊடகவியலாளன்.

# பருத்தித்துறை டிப்போ பஸ்சேவைகள் இப்போது பெரிதும் சீரடைந்துள்ளன

கட்டைவேலி,மே28

பருத்தித்துறை இ.போ.ச டிப்போவினால் நடத்தப்பட்டுவரும் பஸ் சேவைகள் பெரிதும் சீரடைந்துள்ளன.

பஸ் வண்டிகள், உதிரிப்பாகங்கள், ஒயில், ரயர், ரியூப் பற்றாக்குறை காரணமாக கடந்த சில மாதங்களாக பருத்தித்துறை இ.போ.ச. டிப்போவினால் நடத்தப்பட்டு வந்த பஸ்சேவைகள் யாவும் மிக மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே நடைபெற்று வந்தன.

போக்குவரத்து அமைச்சு யாழ்ப்பாணத்துக்கு 15 பஸ் வண்டிகளை அனுப்பிவைத்துள்ளதைத் தொடர்ந்து அவற்றில் 6 பஸ் வண்டிகள் பருத்தித்துறை டிப்போவுக்கு ஒதுக்கப்பட்டுள்ளன. அவற்றில் வண்டிகளுக்கான ரயர் ரியூப் உள்ளிட்ட ஒரு தொகுதி உதிரிப்பாகங்களும் கிடைத்துள்ளன.

இந்நிலையில் பருத்தித்துறை இ. போ.ச. டிப்போவினால் நடத்தப்படும் பஸ் சேவைகள் யாவும் சீரடைந்துள்ளன.

பருத்தித்துறையிலிருந்து நெல்லியடி ஊடாக யாழ்ப்பாணத்துக்கு முதலாவது பஸ் சேவை காலை 5.30 மணிக்கு ஆரம்பமாகின்றது. தொடர்ந்து காலை 9 மணிவரை 15 நிமிடங்கள், 20 நிமிடங்கள் என்ற இடைவெளியில் அடுத்தடுத்து பஸ்வண்டிகள் சேவைக்கு விடப்படுகின்றன. காலை 9 மணிக்குப் பின்னர் அரை மணி நேரத்துக்கு ஒரு தடவை நெல்லியடி ஊடாக யாழ்ப்பாணத்துக்கு சேவை இடம்பெறுகிறது. யாழ்ப்பாணத்துக்கான கடைசி பஸ் வண்டி பிற்பகல் 4மணிக்கு பருத்தித்துறையிலிருந்து புறப்படுகிறது. (அ-275)

# நெடுந்தீவுக்கான போக்குவரத்து நேற்று வழமைக்குத் திரும்பியது

நல்லூர்,மே28

நெடுந்தீவுக்கான போக்குவரத்து நேற்று ஞாயிற்றுக்கிழமை மீண்டும் வழமைக்குத் திரும்பியது.

கடந்த வியாழக்கிழமை நெடுந்தீவில் உள்ள கடற்படைத் தளம் மீது நடத்தப்பட்ட தாக்குதலை அடுத்து கடந்த மூன்று தினங்களாக நெடுந்தீவுக்கான போக்குவரத்துச் சேவை முற்றாகத் துண்டிக்கப்பட்டது.

நேற்றை தினம் படகுச் சேவை இடம்பெற்றது. அதனால் அலுவல்களின் பொருட்டு அங்கு சென்று அகப்பட்டுக்கொண்ட பெரும் எண்ணிக்கையான மக்கள் நெடுந்தீவில் இருந்து யாழ்ப்பாணம் வந்துசேர்ந்தனர். இவர்களில் பலர் அரச ஊழியராவர். அதேபோன்று யாழ். நகரில் அகப்பட்ட நெடுந்தீவு மக்களும் நேற்று தமது ஊருக்குத் திரும்பிச் சென்றனர். (அ-111)

# கைதடி, நவாலியில் நேற்று சுற்றிவளைப்பும் தேடுதலும்

யாழ்ப்பாணம்,மே28

கைதடி மற்றும் நவாலிப் பகுதிகளில் நேற்றுப் படையினர் பெரும் அளவிலான சுற்றிவளைப்புத் தேடுதல்களை நடத்தினர்.

இரண்டு பகுதிகளிலும் மக்களைக் குறிப்பிட்ட இடத்துக்கு கூட்டிச் சென்று விசாரித்தனர்.

கைதடிப் பகுதி நேற்று அதிகாலை சுற்றிவளைக்கப்பட்டு, படையினரால் அங்கு தேடுதல் நடத்தப்பட்டது.

கைதடி மத்தி, வடக்கு, கிழக்கு ஆகிய பகுதிகளை உள்ளடக்கிய பெரும் பிர தேசம் நேற்று காலை 6 மணிக்கு சுற்றி வளைக்கப்பட்டது.

கைதடி குருசாமி வித்தியாலயத்துக்குச் செல்லுமாறு மக்கள் கேட்கப்பட்டனர். அங்கு விசாரணைகள் நடத்தப்பட்ட பின்னர் நேற்றுமாலை விடுவிக்கப்பட்டனர்.

சில இளைஞர்களின் அடையாள அட்டைகளைதுபு தம்முடன் எடுத்துச் சென்ற படையினர் அவற்றை முகாமுக்கு வந்து பெறுமாறு அறிவுறுத்தினர்.

**நவாலியில்**

நவாலி, ஆனைக்கோட்டைப் பிரதேசங்களில் பெரிய அளவிலான சுற்றிவளைப்புத் தேடுதல் நேற்றுப் படையினரால் மேற்கொள்ளப்பட்டது.

காலை 6 மணிக்கு ஆரம்பிக்கப்பட்ட இத்தேடுதலின்போது மக்கள் அனைவரையும் நவாலி சிந்தாமணிப் பிள்ளையார் ஆலய வீதிக்கு அழைத்துச் சென்ற படையினர் அடையாள அட்டைகளைப் பார்வையிட்டு சோதனைகளை மேற்கொண்டனர்.

(அ-1-75-100)

# திருட்டுக்கோஷ்டியின் வாள் வெட்டினால் வயோதிபர் காயம்

யாழ்ப்பாணம்,மே28

திருட்டுக்கோஷ்டியின் தாக்குதலுக்கு இலக்காகி நவாலி வடக்கைச் சேர்ந்த ஒருவர் படுகாயமடைந்தார். நேற்று அதிகாலை ஒரு மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த இளையதம்பி மருதகுட்டி(வயது 85) என்பவரே வாள் வெட்டு மற்றும் கொட்டன் தாக்குதல் ஆகியவற்றுக்கு இலக்காகி யாழ்ப்பாணம் போதனா வைத்திசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்

சுமார் ஆறு, ஏழுபேர் கொண்ட கோஷ்டி ஒன்று வாள், கத்தி, கொட்டன்கள், துப்பாக்கிகள் சகிதம் காயமுற்றவரின் வீட்டுக்கு வந்தனர் என்றும் வந்த கையோடு வயதானவரைத் தாக்கினர் என்றும் சொல்லப்படுகிறது. வீட்டிலிருந்த மற்றவர்கள் தொலைபேசி மூலம் உறவினர்களை அழைத்ததனை அறிந்த அக்கோஷ்டி தப்பிச் சென்றுவிட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (அ-78)

# அரசும் புலிகளும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொடூர யுத்தத்தை நாம் எதிர்பார்க்கலாம்'' - என்று மாற்றுக் கொள்கைக்கான நிலையத்தின் ஊடகப் பணிப்பாளர் சுனந்த தேசப்பிரிய கூறுகின்றார்.

இந்தியா - இலங்கை இடையேயுள்ள குறுகிய பாக்கு நீரிணையில் புலிகளின் நகர்வுகளை அவதானிக்கும் நெடுந்தீவுக் கரையோர 'ரடார்' நிலையத்தைப் பறிகொடுத்தமை அரசுப் படைகளுக்கு ஏற்பட்ட பெரிய இழப்பு என்கின்றன பாதுகாப்பு வட்டாரங்கள்.

''நெடுந்தீவு மீதான தாக்குதல் மூலம் புலிகள் தங்களின் கடல்வலு ஆதிக்கத்தை மீள ஒரு தடவை நிருபித்திருக்கின்றார்கள். அதேசமயம் கொழும்பில் நடத்திய கிளைமோர் தாக்குதல் மூலம் தங்களின் கெரில்லாத் தாக்குதல் வலிமையும் பாதுகாப்பாகத் தங்களுக்கு உள்ளது என்பதை அவர்கள் நிரூபித்திருக்கின்றனர்.'' - என்கின்றார் பாதுகாப்பு நிலைவரம் பற்றிய ஆய்வாளர் நாமல் பெரேரா.

''தீவுப்பகுதி மீது இவ்வாறு ஒழுங்குக் கிரமமாகத் தாக்குதல் தொடருமானால் யாழ்ப்பாணம் முழு அச்சுறுத்தலுக்கு உள்ளாகும்.'' - என்கின்றார் ஓய்வு பெற்ற இராணுவ பிரிகேடியர் விபுல் போட்ஜு.

இராணுவம் தற்போது ஆரம்பித்துள்ள பெரும் படை நடவடிக்கைத் திட்டத்தை நிறுத்தாத வரையில், 2005 ஒக்டோபரில் குழம்பிய அமைதிப் பேச்சுகளை மீள ஆரம்பிக்க இடமேயில்லை என்று புலிகளின் அரசியல் பொறுப்பாளர் சு. ப. தமிழ்ச்செல்வன் கூறியிருக்கின்றமையும் கவனிக்கத்தக்கது.

இவையெல்லாம் பெரும் யுத்தம் வெடிப்பதற்கான கட்டியங்கூறலாகவே கொள்ளப்படவேண்டியவை.

இவ்வாறு அந்தச் செய்தி நிறுவனம் மேலும் தெரிவித்திருக்கின்றது. (உ)

## நாளை

| | |
|---|---|
| வைகாசி - 15 | செவ்வாய்க்கிழமை 29.05.2007 |
| திதி:திரயோதசி | பின்னிரவு : 3.54 |
| நட்சத்திரம்: | சுவாதி பின்னிரவு : 03.35 |
| சுபநேரம் | : 10.22 - 11.52 |
| ராகுகாலம் | : 02.52 - 04.22 |

# சுட்டிபுரத்தில் இன்று பொங்கல்

யாழ்ப்பாணம்,மே28

வரணி சிட்டிவேரம்(சுட்டிபுரம்) கண்ணகை அம்மன் ஆலய வருடாந்தப் பொங்கல் உற்சவம் இன்று காலை நடைபெறவுள்ளது. பொங்கல் உற்சவத்தை தொடர்ந்து ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்.

தேர்த்திருவிழா எதிர்வரும் 9ஆம் திகதி காலை 10.30 மணிக்கும் தீர்த்தத் திருவிழா மறுநாள் காலை 10.30 மணிக்கும் நடைபெறவுள்ளது. (அ-250)

# வேலணை பெருங்குளம் அம்மன் கோயிலில் மீண்டும் பூசைகள்

நல்லூர்,மே28

வேலணை பெருங்குளம் முத்துமாரி அம்மன் ஆலயத்தின் பூசை வழிபாடுகள் எதிர்வரும் வெள்ளிக்கிழமை தொடக்கம் மீண்டும் நடைபெறவுள்ளன.

கடந்த மாதம் இந்த ஆலயத்தில் ஆயுதங்கள் கண்டெடுக்கப்பட்டதாகத் தெரிவித்து பூசகரும் அறங்காவலர் சபைத் தலைவரும் படையினரால் கைது செய்யப்பட்டனர். அதனை அடுத்து சுமார் ஒரு மாதமாக பூசை வழிபாடுகள் இடம்பெறவில்லை.

ஆலய பரிபாலன சபையினர் மேற்கொண்ட நடவடிக்கைகளை அடுத்து எதிர்வரும் முதலாம் திகதி வெள்ளிக்கிழமை மீண்டும் வழிபாடுகள் நடத்தப்படவுள்ளன. (அ-202-111)

# அதிக விலைகளில் உணவுப் பண்டங்கள்

யாழ்ப்பாணம்,மே28

யாழ்.நகரப் பகுதியிலுள்ள உணவகங்களில் உணவுப் பொருள்கள் அதிகரித்த விலையில் விற்பனை செய்யப்படுவதாக நுகர்வோர் தெரிவிக்கின்றனர்.

அண்மையில் யாழ்.அரச அதிபர் உணவுப் பொருள்களின் விற்பனை விலைகளை நிர்ணயம் செய்து அறிவித்திருந்தார். அதன்படி அரைப்பார்சல் மதிய உணவு 40 ரூபாவாகவும் முழுப்பார்சல் மதிய உணவு 50 ரூபாவாகவும் விற்பனை செய்யப்படவேண்டும்.

எனினும் நகரப்பகுதி உணவகங்களில் அரைப்பார்சல் மதிய உணவு 50 ரூபாவாகவும் ஒரு பார்சல் மதிய உணவு 60-70 ரூபாவாகவும் விற்பனை செய்யப்படுகின்றன.

ஏனைய சிற்றுண்டி வகைகளும் அதிகரித்த விலையிலேயே விற்பனை செய்யப்படுகின்றன என நுகர்வோர் விசனம் தெரிவிக்கின்றனர். (202)

# காணாமற்போன மீனவர்கள் இன்னும் திரும்பவில்லை

யாழ்ப்பாணம்,மே28

இம்மாத நடுப்பகுதியில் கட்டுமரத்தில் மீன்பிடிக்கச் சென்று காணாமற்போன, அனலைதீவைச் சேர்ந்த மூன்று மீனவர்கள் இன்னும் திரும்பவில்லை என்று அறிவிக்கப்படுகிறது.

அனலைதீவைச் சேர்ந்த ஜெகநாதன் ஜெயந்தன், வேலாயுதம் தேவன், தவராசா ஜெகன் ஆகியோர் மற்றும் இருவருடன் கட்டுமரத்தில் மீன்பிடிக்கச் சென்றதாகவும் கடுங்காற்றுக் காரணமாக காணாமற்போனதாகவும் தெரிவிக்கப்பட்டது.

மேற்படி மூவர் தொடர்பாகவும் நேற்றுவரை எவ்வித தகவலும் கிடைக்கவில்லை என்று அவர்களின் பெற்றோர்கள் உதயனுக்குத் தெரியப்படுத்தினர்.

மேற்படி மூவரும் திரும்பிவிட்டனர் என இம்மாதம் உதயனில் வெளியான செய்தி தவறாகும். தவறுக்கு வருந்துகின்றோம். (அ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



## வரணி அருள்மிகு சிட்டிவேரம் (சுட்டிபுரம்) கண்ணகை அம்பாள் தேவஸ்தானம்
### சர்வசித்து வருஷ வைகாசி மஹோற்சவ விஞ்ஞாபனம் - 2007

வைகாசி திங்கள் 14ஆம் நாள் இன்று (28.05.2007) திங்கட்கிழமை முற்பகல் 8 மணிக்கு பொங்கல் நடைபெற்று தொடர்ந்து உற்சவம் 12 நாள்கள் நடைபெற்று தினமும் முற்பகல் 11 மணிக்கு அம்பாள் வீதி உலா வருவா.

09.06.2007 சனிக்கிழமை தேர்த் திருவிழா முற்பகல் 10.30 மணிக்கும் 10.06.2007 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு தீர்த்தோற்சவமும் நடைபெறும்.

(அ-52502) **பரிபாலனசபை.**

---

## அகவை அறுபது காணும் ஆசானை வாழ்த்துகின்றோம்

### பொன்.கமலநாதன்
(B.Com, PGDE, SLPS I)



எமது கல்லூரியில் ஆசிரியராக,
பிரதி அதிபராக, அதிபராக
கடமையாற்றி அன்பினால்
எதனையும் செய்யலாம் என
நிரூபித்த செயல்வீரன் தனது ஓய்வு
காலத்தில் சீரும்
சிறப்புடனும் வாழ
வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர் கழகம்
**யா/யூனியன் கல்லூரி, தெல்லிப்பளை,**
(60939) **யா/பொன்.பரமானந்தர் ம.வி. குரும்பசிட்டி.**

---

## அபிவிருத்தி அதிர்ஷ்டம்
### உத்தியோகபூர்வ முடிவுகள்

884 சிவப்பு

வெற்றி இலக்கங்கள்

மிதுனம் **17 19 21 49**

**25-05-2007**

செல்லுபடியாகும் தொடர் இல. 5918257 - 5932334

ஜக்பொட் பரிசு ரூபா. 2,397,750/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 307,992 | 10/- | 3,079,920/- |
| 2 இலக்கங்கள் | 28,289 | 20/- | 565,780/- |
| 1 இல. + லக்கினம் | 28,047 | 30/- | 841,410/- |
| 2 இல. + லக்கினம் | 2,594 | 100/- | 259,400/- |
| 3 இலக்கங்கள் | 760 | 500/- | 380,000/- |
| 3 இல. + லக்கினம் | 60 | 5,000/- | 300,000/- |
| 4 இலக்கங்கள் | 4 | 100,000/- | 400,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 2,397,750/- | |
| மொத்தம் | | | 5,826,510/- |
| முச்சக்கர வண்டிகளின் பெறுமதி | 5 | 204,700/- | 1,023,500/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 367,751 | | 6,850,010/- |

இந்த செவ்வாய்க்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 3,085,650/-

தொடர் இல.4062758 க்கு மேற்பட்ட நீல நிற டிக்கட்டுக்கள் 2007 மே மாதம் 29 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சீட்டிழுப்புக்குச் செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் முச்சக்கரவண்டி வெற்றி பெறும் ஐந்து டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| கண்டி | 5919102-3-11 |
| அம்பாறை | 5921651-9-49 |
| கொழும்பு | 5918323-4-74 |
| கம்பஹா | 5930997-1-32 |
| புத்தளம் | 5928796-5-12 |

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
33, சேன் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03

---

## முதலாம் ஆண்டு நினைவுமலர்



அமரர்
### தம்பிராசா இரத்தினம்
(அரசாங்க வர்த்தகத் திணைக்களம், காங்கேசன்துறை)

திதி: துவாதசி 28.05.2007

கனவுகள் அரும்பிட
12.02.1949
நினைவுகள் வெதும்பிட
08.06.2006

ஆண்டொன்று ஆனாலும்
ஆறவில்லை எம் துயரம்
ஆண்டுகள் கோடி ஆனாலும்
ஆறாது உங்கள் நினைவுகள்

என்றும் உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சூராவத்தை வடக்கு,
சுன்னாகம்.
தொ.பே.: 0776446601 (52495) **குடும்பத்தினர்.**

---

## விசேட...
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேற்கொண்ட தரைத் தாக்குதலுக்குப் பதிலடியாக விடுதலைப்புலிகள் கடும் ஷெல் தாக்குதல்களை நடத்தினர் என்று கூறப்படுகிறது. இதில் விசேட அதிரடிப்படையினர் 18 பேர்வரை காயமடைந்தனர் என்று ஒரு தகவல் தெரிவித்தது. இவர்களில் 11 பேர் அம்பாறை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். ஏனையோர் மஹஓயா மருத்துவமனைக்கு கொண்டுசெல்லப்பட்டனர். - என்று மட்டக்களப்பு பொலிஸாரை மேற்கோள்காட்டி 'தமிழ்நெற்' இணையத்தளம் தெரிவித்தது. (சி)

## ஓமந்தை...
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதேவேளை-

ஓமந்தை சோதனைச் சாவடியை மீண்டும் திறப்பது குறித்து செஞ்சிலுவைச்சங்கப் பிரதிநிதிகள் கடந்த வெள்ளிக்கிழமை பாதுகாப்பு அமைச்சின் அதிகாரிகளுடன் பேச்சு நடத்தியிருந்தனர் எனத் தெரிய வருகிறது. இந்தப் பேச்சுகளின் விவரங்கள் குறித்து எதுவும் தெரிவிக்கப் படவில்லை.

ஓமந்தை சோதனைச் சாவடி மீண்டும் திறப்பது குறித்து இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் பிரசாத் சமரசிங்கவிடம் கேட்டபோது "நாம் சோதனைச்சாவடியை திறக்கவே விரும்புகிறோம்" - என்றார்.

இதேவேளை, முல்லைத்தீவு, கிளிநொச்சி பகுதிகளில் உணவு மற்றும் எரிபொருளுக்கு அடுத்த ஒரு சில நாட்களில் தட்டுப்பாடு ஏற்படலாம் என்று எச்சரிக்கப்பட்டுள்ளது. (சி)

## புனித...
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மடுவைப் பாதுகாக்கும் விடயத்தில் நான் மிகவும் அக்கறையுடன் செயற்படுகிறேன். அரசின் இச் செயற்பாட்டைத் தடுத்து நிறுத்துவதற்கு ஐக்கிய தேசியக் கட்சி அரசிற்கு அழுத்தம் கொடுப்பது இந்தச் சந்தர்ப்பத்தில் மிகவும் அவசியமாகின்றது. - என்றார். (அ-சி)

---

## ICT BOOKS
தரம் 10,11 இற்கான K.R.சுகுமார்
எழுதிய **ICT Unit:I,II,II,IV**
புத்தகங்களைப் பெற்றுக்கொள்ள அழையுங்கள்.
021-4590291

---

## கார் விற்பனைக்கு
பேராசிரியர் ஒருவரின் பாவனையில் இருந்த 15 சிறி XXXX தொடரிலக்கமுடைய NISSAN SUNNY (VACAN) கார் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0776 062944

---

கற்கைநெறியைத் தெரிவு செய்யும்போதும் கற்பிக்கும் நிறுவனத்தைத் தெரிவு செய்யும்போதும் விழிப்பாயிருங்கள்!




**CB Computer Academy**
Station Road, Kondavil. ☎:-021-4590291

---

## பொருளியல் கருத்தரங்கு

10 மாதிரிப் பரீட்சைகளும்
20 மணித்தியால உங்கள் பரீட்சை
வெற்றிக்கான வழிகாட்டல்
கருத்தரங்கு
By M.C. சுதாகரன் B.Com (Hons)
ஆசிரியர்

கருத்தரங்கு 1
வியாழன் 31.05.2007
9.00 - 1.00 மணிவரை

குறிப்பு: எமது நிறுவனத்தில் கற்காத வெளி மாணவர்களும் இப்பரீட்சையிலும் கருத்தரங்கிலும் கலந்துகொள்ளமுடியும்.

இதற்கான பதிவு
திங்கள் - செவ்., புதன்
காலை 8.00 - 11.30 மணிவரை
பதிவை மேற்கொள்ளமுடியும்.

**பொருளியற் கல்லூரி**
யாழ்ப்பாணம்.

---

## விற்பனையாகின்றன! புதிய பாடநூல்கள்

❋ பாலர் வகுப்பு முதல் பல்கலைக்கழகம் வரை கற்போருக்கான புதிய பாட நூல்கள் ஒரே இடத்தில் விற்பனையாகின்றன!
இடம்: யாழ்.இந்துக் கல்லூரி
(குமாரசாமி மண்டபம்- முதலாம் மாடி)
காலம்: 28.05.2007 முதல் 03.06.2007 வரை
நேரம்: காலை 9.00 மணி முதல் பி.ப 4.00 மணி வரை நடைபெறும்.
மற்றும் வியாபாரிகள், பாடசாலைகள், பொது நிறுவனங்கள் அனைத்துக்கும் குறித்த விலையில் 10% கழிவு வழங்கப்படும்.

தொடர்பு:
**ஸ்ரீலங்கா புத்தகசாலை**
234, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021 222 2573 (அ-52500)

---

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



ஸ்ரீமதி
### நவரெட்ணம் மனோன்மணி

ஆண்டுகள் நான்கு ஆனாலும்
ஆறாது உம் துயரம்

ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

ஆவரங்கால் சிவன்கோயிலடி. (61008) **நவரெட்ணம் (கணவர்).**

---

## மரண அறிவித்தல்கள்

### நிரோஜா ராஜ்மோகன்



சங்குவேலி வடக்கைப் பிறப்பிடமாகவும் குளப்பிட்டிச் சந்தி, கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட நிரோஜா ராஜ்மோகன் 26.05.2007 சனிக்கிழமை அகால மரணமானார்.

அன்னார் ராஜ்மோகன் - சிவரஞ்சினி தம்பதியரின் அன்பு மகளும், சிவராஜ், அருண்ராஜ், நிரோஜன், நிஷாலினி ஆகியோரின் அன்புச் சகோதரியும் லோகேஸ்வரன், சோபனா, நவராஜா, பானுமதி, யோகராஜா, அருள்மணி ஆகியோரின் அன்பு மருமகளும் மதி, பாலன், யோகவா ஆகியோரின் அன்புப் பெறாமகளும், க.சேனாதிராஜாவின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (28.05.2007) திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

குளப்பிட்டிச் சந்தி,
கொக்குவில். (61015)
தகவல்:
**குடும்பத்தினர்.**

### கமலாதேவி மகாலிங்கம்



யாழ்ப்பாணம், 226, பலாலி றோட், கந்தர்மடம் பலசரக்குக் கடை உரிமையாளர் கமலாதேவி மகாலிங்கம் (அக்காகடை) நேற்று (27.05.2007) சிவபதமடைந்தார்.

அன்னார் சுப்பிரமணியம் - வள்ளியம்மையின் மூத்த புதல்வியும் இராசையா மகாலிங்கத்தின் பாசமிகு மனைவியும் சித்திராங்கன் நாகேஸ்வரியின் பாசமிகு சகோதரியும் சித்திராங்கன், கேனகா (யாழ்.இந்து மகளிர் கல்லூரி 11ஆம் ஆண்டு மாணவி)ஆகியோரின் பெரிய தாயாரும், திருமதி பராசக்தி பத்மநாதன் (ஓய்வுபெற்ற ஆசிரியர் - கொக்குவில்ஸ்ரீ ஞானபண்டித வித்தியாசாலை) அவர்களின் மச்சாளும் இளையதம்பி பத்மநாதனின் தங்கையும் நாதபரன், நாததீபா, இராகசுதன் ஆகியோரின் அத்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.05.2007) திங்கட்கிழமை பி.ப. ஒரு மணியளவில் நடைபெற்று பூதவுடல் கோம்பையன் மணல் மயானத்தில் தகனம் செய்யப்படும். (இறுதிச் சடங்குகள் 40/1, பெரியதம்பிரான் வீதி, வண்ணை மேற்கு, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் நடைபெறும்)

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**இராசையா மகாலிங்கம் (கணவர்),**
**திரு திருமதி பத்மநாதன்.**

### இளையதம்பி இராசையா
(கட்டட ஒப்பந்தகாரர்)



அரியாலை, நொத்தாரிஸ் வீதியைப் பிறப்பிடமாகவும் வடமராட்சி அல்வாய் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட இளையதம்பி இராசையா 24.05.2007 வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இளையதம்பி - பூரணம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற யோதிமலரின் அன்புக் கணவரும் ரேவதி (லண்டன்) காலஞ்சென்றவர்களான ஐங்கரன், இந்திரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் தமிழ்அழகனின் மாமனும் ஜோதியின் (லண்டன்) அன்புப் பேரனும் இராசம்மா, மாணிக்கம், நடராசா, சரஸ்வதி ஆகியோரின் அன்புச் சகோதரரும் சின்னையா, கந்தசாமி, நல்லம்மா, தங்கச்சியம்மா, மனோன்மணி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.05.2007) திங்கட்கிழமை மு.ப. 11 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

47/1, நொத்தாரிஸ் வீதி,
அரியாலை,
யாழ்ப்பாணம். (61012)
தகவல்:-
**ரேவதி (மகள்), தி.சின்னையா**
[ஓய்வுபெற்ற ஊழியர், விற்பனைத் திணைக்களம்]

### சோமசுந்தரம் பரமேஸ்வரன்

காரைநகர், செம்பாட்டைப் பிறப்பிடமாகவும் களபூமி சத்திரந்தையை வசிப்பிடமாகவும் வவுனியா குருமன்காட்டை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட சோமசுந்தரம் பரமேஸ்வரன் நேற்று (27.05.2007) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சோமசுந்தரம் வள்ளிப்பிள்ளையின் அன்பு மகனும் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை - தங்கம்மாவின் மருமகனும் அன்னபாக்கியத்தின் அன்புக் கணவரும் கலைவாணி, கலைமதி, தவராசா ஆகியோரின் அன்புத் தந்தையும் பரமேஸ்வரனின் மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் வவுனியா குருமன் காட்டில் இன்று (28.05.2007) திங்கட்கிழமை நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

4, ஐயனார் கோயில் வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.
தகவல்:-
**வே.கணபதிப்பிள்ளை**
**(மைத்துனர்).**

---

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) [illegible] 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 28.05.2007இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org